இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 20.10.2026

மக்களைக் காத்தது தி.மு.க. அரசு!

ஒரு நாள் பெய்த மழைக்கே மக்களைக் காக்கத் தவறியது த.வெ.க. அரசு. எந்த திட்டமிடுதலும் செய்யவில்லை. ஆனால் பெரு மழைக் காலங்களில் மக்களைக் காத்தது தி.மு.க. அரசு.

மழை பெய்யும் போது தண்ணீர் நிற்கும். மழை நின்றதும் தண்ணீர் வடிந்து விடும். அத்தகைய நிலைமையைச் சென்னையில் உருவாக்கி வைத்திருந்தது கழக அரசு. அதற்குக் காரணம் முன்கூட்டியே செய்த திட்டமிடல்கள் தான்.

மழை பெய்து சில மணி நேரத்தில் வெள்ளம் வடிந்து விடக் கூடிய உள்கட்டமைப்பு வசதிகளை கடந்த தி.மு.க. அரசு செய்து வைத்திருந்தது. அதனால் எங்கும் மழை, வெள்ளம் தேங்கவில்லை.

சென்னை மாநகராட்சியில் மட்டும் ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது தி.மு.க. ஆட்சியில். ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டன. சென்னைக்கு ஏற்படும் வெள்ளப்பாதிப்புகளை ஆய்வு செய்ய முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் கொடுத்த 161 ஆலோசனைகளில் 101 ஆலோசனைகள் ஏற்கப்பட்டு படிப்படியாக செய்து தரப்பட்டது.

சென்னையில் உள்ள கால்வாய்கள் அனைத்தும் தொடர்ந்து தூர் வாரப்பட்டது. புறநகர் கால்வாய்கள் அகலப்படுத்தப்பட்டன.

மிகப்பெரிய மழை பெய்தாலும் உடனடியாக நீர் வடிந்துவிடக் கூடிய அமைப்பை தி.மு.க. அரசு உருவாக்கியது. தி.மு.க. ஆட்சிக் காலத் திட்டமிடுதல்களை கண்காணித்து ஓராண்டு காலத்துக்குள் முடித்துவிட்டால் எங்கும் தண்ணீர் நிற்கவில்லை என்பது மெய்ப்பிக்கப்பட்டு விடும்.

மேலும், மழை - வெள்ளக் காலங்களில் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதையும் முன்னுதாரணமாகச் செய்து காட்டியது திராவிட மாடல் அரசு.

பருவமழையால் மக்கள் வாழும் தாழ்வானப் பகுதிகளில் தேங்கும் மழை நீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவும், மக்கள் அச்சமின்றி தங்கள் அன்றாடப் பணிகளில் ஈடுபட உதவும் வகையிலும் அனைத்து ஏற்பாடுகளையும் தி.மு.க. அரசு செய்து தந்தது. அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துவார்.

மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளை அளித்திடும் நோக்கில் வெள்ள நிவாரண முகாம்கள் உடனடியாக அமைக்கப்படும். இந்த முகாம்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி ஆகியவை செய்து தரப்படும். இதற்காக சமையல் கூடங்கள் தயார் நிலையில் இருக்கும். நிலையான மருத்துவ முகாம்கள், நடமாடும் மருத்துவ முகாம்கள் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். தாழ்வானப் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு உணவு தயாரித்து வழங்கப்படும்.

மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட மோட்டார் பம்புகள் தயாராக இருக்கும். காற்றில் விழும் மரங்களை அகற்றுவதற்காக மர அறுவை இயந்திரங்கள் தயாராக இருக்கும். சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்காமல் தொடர்ந்து பராமரிக்கப்படும்.

பொதுமக்கள் தங்கள் தேவைகளை உடனடியாகத் தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் அறிவிக்கப்படும். இந்தப் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான அதிகாரிகள் தயார் நிலையில் வைக்கப்படுவார்கள்.

சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு தடையில்லாமல் குடிநீர் வழங்கப்படும். அனைத்து அரசு மருத்துவமனைகளும் தயார் நிலையில் இருக்கும். தனியார் மருத்துவமனைகளுக்கும் அரசு சிறப்பு உத்தரவுகளைப் போட்டு வைத்திருக்கும்.

இவை அனைத்தும் செய்து வைத்திருந்தால் அது தி.மு.க. அரசு. இவை எதுவும் செய்யாமல், கடந்த ஆட்சி மீது குறை சொல்லி ரீல்ஸ் போட்டுக் கொண்டிருந்தால் அது த.வெ.க. அரசு.

ஆனால் இன்று என்ன நடக்கிறது?

முதலமைச்சரின் பெரம்பூர் தொகுதியில் மக்கள் குறைகளைக் கேட்க த.வெ.க. அரசில் யாருமில்லை, அந்தக் கட்சியிலும் யாருமில்லை. எந்த அமைச்சரும் வரவில்லை. 'சாப்பிட்டீங்களா என்று எங்களைக் கேட்கக்கூட அரசாங்கத்தில் இருந்து யாரும் வரவில்லை' என்கிறார்கள் பொதுமக்கள்.

தொடர் மழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. நான்கு மணி நேரம், ஆறு மணி நேரம் மின்சாரம் இல்லை. அதைக் கவனிப்பார் யாருமில்லை. மரங்கள் முறிந்து விழுகிறது. அப்புறப்படுத்த அரசு முயற்சிக்கவில்லை. சென்னை ராயபுரத்தில் ஏழு மணி நேரமாக மின்வெட்டு. மக்களே வீதிக்கு வந்து சாலை மறியல் செய்துள்ளார்கள். வேளச்சேரிக்கு அமைச்சர் குமார் என்பவர் வந்துள்ளார். 'ஐந்து மாதம் கழித்து இப்பதான் உங்களைப் பார்க்கிறோம்' என்று மக்கள் முற்றுகையிட்டுள்ளார்கள். புகார் சொல்ல வந்த பொதுமக்களை த.வெ.க. நிர்வாகிகள் விரட்டி அடித்துள்ளார்கள்.

மழை, வெள்ளக் காலங்களில் எப்படிச் செயல்பட வேண்டும் என்ற முன் திட்டமிடுதலே இல்லாமல், மழையன்று காலையில் சென்னை மாநகராட்சி அலுவலகத்துக்கு முதலமைச்சர் விஜய் வந்து பார்ப்பதால் என்ன பயன்?

ஒரு படத்தில், டிரைவர் தனது காரை பின்னால் ரிவர்ஸ் எடுப்பார். எடுக்கும் போது, 'பின்னால் இடிக்குதா?' என்று பார்க்கச் சொல்வார். பின்னால் சுவரில் இடித்த பிறகு, 'இடிச்சிருச்சு' என்று சொல்வார். அதுபோல மழை பெய்யும் அன்று காலையில் வந்து வரப்போகும் வெள்ளத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

நாடு இன்னும் எத்தனை விதமான கொடுமைகளை எல்லாம் பார்க்கப் போகிறதோ?

கட்சியா இல்லை Narcos கூடாரமா? அதிகமாகிக் கொண்டே போகும்

த.வெ.க. போதைப் பொருள் Network-ன் அட்டூழியம்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக். 20 - கட்சியா இல்லை Narcos கூடாரமா? என்று அளவுக்கு த.வெ.க. போதைப் பொருள் Networkன் அட்டூழியம் அதிகமாகிக் கொண்டே போகிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

வரலாற்றில் இல்லாத அளவுக்கு 135 கிலோ மெத்தப்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்தாக நாகை



த.வெ.க. நிர்வாகி பூபாலன் கைதான நிலையில், அது தொடர்பாக செய்தி வெளியிடும் செய்தியாளர்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்து இருக்கிறார் த.வெ.கவின் நாகை நகரச் செயலாளர் பால்ராஜ்.

பூபாலன் த.வெ.கவில் இருந்து நீக்கப்பட்ட நிலையில், கட்சிப்பொறுப்பில் உள்ள இன்னொரு நிர்வாகி, போதைப்பொருள் கடத்திய நபருக்கு வக்காலத்து வாங்குவதும் பத்திரிகையாளர்களுக்கு கொலை மிரட்டல் விடுவதும் ஏன்?

கட்சியா இல்லை Narcos கூடாரமா என்று கேட்கும் அளவுக்கு த.வெ.க போதைப்பொருள் Networkன் அட்டூழியம் அதிகமாகிக்கொண்டே போகிறது.

இந்த Dummy முதலமைச்சரின் ஆட்சியில் அவரது கட்சியிலேயே Druglordsம், Cartel Mafiaவும் சுதந்திரமாகச் சுற்றி வருகிறார்கள்.

Reels எடுப்பதிலேயே காலத்தை கழிக்காமல் கொஞ்சம் Realityக்கு வந்து போதைப்பொருள் நடமாட்டத்தையும் அதைக் கடத்தும் த.வெ.க.வினரையும் முதலமைச்சர் கட்டுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. நிர்வாகி ரூ.1000 கோடி மதிப்பிலான போதைப்பொருள் பதுக்கிய வழக்கில்

போலீஸ் உயரதிகாரிக்குத் தொடர்பு - முக்கிய புள்ளிகள் சிக்க வாய்ப்பு!

புலனாய்வுத்துறை விசாரணையில் திடுக் தகவல்கள்!

நாகப்பட்டினம், அக். 20 -

நாகப்பட்டினத்தில் ரூ.1000 கோடி மதிப்புள்ள 135 கிலோ த.வெ.க. நிர்வாகியிடம் சர்வதேச போதை பொருளான மெத்த பெட்டமைன் பிடிபட்ட வழக்கில் பல திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்துள்ளது.

மத்திய வருவாய் குற்றப்பிரிவு புலனாய்வுத் துறை திருச்சி மண்டல அதிகாரிகளுக்கு நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்கு சர்வதேச போதைப்பொருளான மெத்த பெட்டமைன் கடத்துவதாக ராமநாத புரம் மாவட்டத்தில் இருந்து கடந்த சில தினங்களுக்கு முன் தகவல் வந்தது.

இதையடுத்து கடந்த 16ம்தேதி நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி அருகே பிரதாபராமபுரத்தைச் சேர்ந்த சுகன் வீட்டில் 16 பேர்கொண்ட புலனாய்வுத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி அங்கு பதுக்கி வைத்திருந்த, சர்வதேச சந்தை மதிப்பில் ரூ.1000 கோடி மதிப்பிலான 135 கிலோ மெத்த பெட்டமைன் பறிமுதல் செய்தனர்.

இந்தக் கடத்தலுக்கு மூளையாக இருந்த நாகப்பட்டினம் மாவட்ட த.வெ.க. செயற்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான வேளாங்கண்ணி அருகே கீழப்பிடாகையை சேர்ந்த பூபாலன் (42), மணிகண்டன் (29), பிரதாப ராமபுரம் சதீஷ் (30) ஆகிய 4 பேரை கைது செய்து வேதாரண்யம் மாஜிஸ்திரேட் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, நள்ளிரவில் நாகப்பட்டினம் மாவட்ட சிறையில் அடைத்தனர்.

லேத் பட்டறையில் தயாரித்த போதைப் பொருள்!

இந்நிலையில் வருவாய் குற்றப்பிரிவு புலனாய்வுத் துறை அதிகாரிகள் அவர்களிடம் நடத்திய விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

கைப்பற்றப்பட்ட மெத்தபெட்டமைன் இன்னும் சில தினங்களில் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த தயார் நிலையில் இருந்தது தெரியவந்துள்ளது. மேலும் ராமநாதபுரத்தில் ஒரு லேத் பட்டறையில் வைத்து மெத்தபெட்டமைன் தயாரித்து நாகப்பட்டினத்திற்கு அனுப்பி வைத்ததாக அங்கு ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் கூறி உள்ளனர்.

இதன் அடிப்படையில் கடந்த ஜூன் மாதம் முதல் வேளாங்கண்ணியில் முகாமிட்ட புலனாய்வுத் துறை அதிகாரிகள், சுகன் மற்றும் அவருடன் தொடர்புடையவர்களின் வீடுகளை ரகசியமாக கண்காணித்து வந்துள்ளனர். ராமநாதபுரத்தில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களின் செல்போன்கள் உரையாடல்கள், வாட்ஸ்அப் செயல்பாடுகளை அதிகாரிகள் கண்காணித்து வந்துள்ளனர். இந்தக் கண்காணிப்பின் போது சந்தேகத்திற்கு இடமாக வந்த அழைப்புகளை பார்த்த போது நாகப்பட்டினத்தில் இருந்து வந்ததை உறுதி செய்தனர்.

ஐரோப்பா – மத்திய ஆசிய நாடுகளுக்கும் கடத்த முயற்சி!

இதன் பின்னர் சுகன் வீட்டில் மெத்த பெட்டமைன் பதுக்கி வைத்திருப்பது தெரியவந்து, புலனாய்வுத் துறை அதிகாரிகள் சுகன் வீட்டில் சோதனை செய்து அதனை பறிமுதல் செய்துள்ளனர்.

நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை வழியாக ஐரோப்பா, மத்திய ஆசிய நாடுகளுக்கும் கடத்த சர்வதேச கடத்தல் கும்பல் தயார் நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

மெத்தபெட்டமைன் தயார் செய்ய வட மாநிலங்களில் இருந்து மூலப் பொருட்களை கும்பல்கள் கொண்டு வந்து பெங்களூரில் இருந்து ராமநாதபுரம் கொண்டு சென்று அங்கு வைத்து தயார் செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது.

ராமநாதபுரத்தில் இருந்து கடத்தப்படும் மெத்தபெட்டமைன் மண்டபம், வேதாளை, பாம்பன் வழியாக இலங்கையில் உள்ள கல்பிட்டிக்கு செல்வதாகவும், அதே போல் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை மன்னார் பகுதிக்கும், தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்கும் மெத்தபெட்டமைன் கடத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

சர்வதேச போதைப் பொருளான மெத்தபெட்டமைன் கடற்கரை மாவட்டமான நாகப்பட்டினத்தில் கைப்பற்ற பட்டுள்ளதால் சர்வதேச குற்ற அமைப்புகளுடன் பிடிபட்ட 4 பேருக்கும், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் தொடர்புகள் இருக்குமா? என்ற கோணத்தில் தொடர்ந்து விசாரணை நடத்தப்படுகிறது.

கைதான த.வெ.க. முன்னாள் நிர்வாகி பூபாலன் தரப்பினர், உயரதிகாரி ஒருவருடன் தொடர்பில் இருந்தாகத் தெரிகிறது.

அதிகாரிகளுக்கு அதிர்ச்சி!

அந்த நபர், பூபாலன் தரப்பினரிடம் 'ஐ' போனில் உள்ள "பேஸ் டைம் ஆடியோவில்" அவ்வப்போது பேசி வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பேஸ் டைம் ஆடியோவில் பேசுவதை எந்த ஒரு தொழில்நுட்பத்தை பயன்படுத்தியும் எடுக்க முடியாது என்பதால், அமெரிக்காவில் உள்ள 'ஐ' போன் தலைமையகத்தை நாடவும் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதனால் பூபாலனுக்கு உதவிய அதிகாரிகளும் அதிர்ச்சியில் உள்ளனர். எனவே இந்திய அளவில் பல முக்கியப் புள்ளிகள் சிக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

கோவை பெரியார் அறிவுலகத்தை
சொந்தப் பணத்திலா ஸ்டாலின் கட்டினார்
என்று கேள்வி எழுப்பும் அதிமேதாவிகளே...

கல்லணையை கட்டிய கரிகாலனும் சரி
பெருவுடையார் கோயில் எழுப்பிய
ராஜராஜ சோழனும் சரி அதனை
அவர்களது சொந்தப் பணத்தில் அவர்கள்
கட்டியதில்லை..

மக்களின் வரிப்பணத்தை அவர்கள்
மக்களுக்காக எப்படி எதற்கு
திட்டம் தீட்டி பயன்படுத்தினார்கள் என்பதை
பொறுத்தே வரலாறு அவர்களை வரவு
வைத்துக் கொள்கிறது..

இதெல்லாம் கும்பாபிஷேக அனுமதிச்
சீட்டையே பிளாக்கில் விற்கும் அரை
குறைகளுக்குப் புரியாது...

#என்னநாஞ் #சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்